# உரிமமற்ற நாய், மோசமான பொருட்களை வைத்திருந்த வீட்டு உரிமையாளருக்கு மாநகர் மன்றம் சம்மன்!



**நமது நிருபர்**

கோலாலம்பூர், மார்ச் 2-

கண்காணிப்பின்றி நாய் வளர்த்தல், மோசமான பொருட்களைக் கூடுதலாக வைத்திருந்த செராஸ், தாமான் கொனாட்டிலுள்ள ஒரு வீட்டின் உரிமையாளருக்கு 2 அபராத நோட்டிஸ்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் விதித்தது. அந்த வீட்டு உரிமையாளர் கடந்த 2023ஆம் ஆண்டிலிருந்து ஏற்படுத்திய பிரச்சினைகள் குறித்து மாநகர் மன்றம் மற்றும் செராஸ் நாடாளுமன்றத்தின் சுகாதார அலுவலகத்திற்கு மீண்டும் மீண்டும் புகார்கள் வந்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்தலத்தில் ஒரு குறிப்பிட்ட பெரியளவிலான மோசமான பொருட்கள் மற்றும் 4 நாய்கள் இருந்தது கடந்த பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி மேற்கொண்ட விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் 2 நோட்டிஸ்கள் வெளியிடப்பட்டு உரிமத்தைப் பெற்று நாய்களின் எண்ணிக்கையைக் குறைத்து மோசமான பொருட்களின் சேமிப்பை 3 நாட்களில் நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.